மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

பொருள் எண்: 01

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் 2024 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வடலூர் நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் சிறப்பு தீர்மானம்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதலமைச்சராக அறிவிப்பு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

அலுவலக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு. எண். /2024/இ1

பொருள் எண்: 02

வடலூர் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணியினை மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் மாவட்டம் ஆகியோர் 30.08.2024 (வெள்ளிக்கிழமை) அன்று நேரடி கள ஆய்வு செய்தனர். மேற்படி, மாண்புமிகு வேளாண் மற்று உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பேருந்து நிலையம் அமைக்கும் பணியில் பேருந்துகள் உள்நுழைவு வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு மற்றும் பேருந்துகள் வெளியே செல்லும் வாயில் பகுதியில் RCC அலங்கார வளைவு அமைக்கும்படி அறிவுறுத்தப்பட்டதை தொடர்ந்து மேற்படி, பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1098/2024/இ1.

பொருள் எண்: 03

வடலூர் நகராட்சி விக்கரவாண்டி – கும்பகோணம் – தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு நாளைக்கு ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள் , அரசு பேருந்துகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் சென்று வருகின்றன. மேற்கண்ட, சாலையின் ஒருபக்கம் மட்டும் LED தெருமின்விளக்குகள் அமைந்துள்ளன. தேசிய நெடுஞ்சாலை என்பதால் சாலையின் அகலம் அதிகமாக உள்ளதால் போதிய வெளிச்சம் இல்லாமையின் காரணமாக அவ்வப்போது விபத்துக்கள் ஏற்படுகிறது. எனவே, சாலையின் இருபக்கமும் LED தெருமின்விளக்குகள் அமைக்குமாறு நகர்மன்ற தலைவர் அவர்களின் நேரடி அறிவுறையின் பேரில் தற்போது கடலூர் – விருத்தாச்சலம் சாலையில் மைய தடுப்புகளில் உள்ள விளக்குகளை அகற்றி அவற்றில் உள்ள LED விளக்குகளை புணரமைப்பு பணி செய்ய வேண்டி தேவையான உதிரி பாகங்கள், Clamp set , 25 mm மற்றும் 50mm GI Pipes மற்றும் மின்ஒயர்கள் மூலம் நான்கு முனை சந்திப்பிலிருந்து சிதம்பரம் சாலையின் நகராட்சி எல்லை வரை அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1097/2024/இ1.

பொருள் எண்: 04

வடலூர் நகராட்சி அரசாணை (நிலை) எண்.70 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.09.2021ன் படி கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023– 2024ன் கீழ் வார்டு எண்20 சேராக்குப்பம் புல எண் 33 அய்யன்ஏரி சுடுகாட்டில் புதியதாக நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி ரூ.158.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது. பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு அரசாணை (நிலை) எண்.228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.13.11.2008ல் குறிப்பிட்டுள்ள விபரப்படி எரிவாயு தகனமேடை பராமரிக்கும் பணியினை தொண்டு நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு தொண்டு நிறுவனம் மூலம் சொந்த செலவில் ஒராண்டிற்கு இயக்கி பராமரிக்க தொண்டு நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகள் பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– .மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். /2023/இ1)

பொருள் எண்: 05

வடலூர் நகராட்சி பகுதியில் உள்ள வடிகாலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை பரிசோதனை செய்து அறிக்கை சமர்பிக்கமாறு பணி இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 9192/2022/SBM1. நாள்13.01.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி பகுதியில் உள்ள 1) கோபி பவானி திருமண மண்டபம் அருகில் உள்ள வடிகால் கழிவுநீர், 2)அன்னை சத்யா வீதி வடிகால், 3) கல்லூக்குழி சாலை வடிகால் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீர் பரிசோதனை செய்து தர உதவி இயக்குநர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், சிப்காட் தொழிற்பேட்டை, குடிகாடு அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதில் கட்டண தொகை ரூ.12,300/– செலுத்த வேண்டும் என மேற்படி துறையின் கடித ந.க.எண்.TNPCB/AEL/CUD/F. நாள்.20.09.2024 கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டண தொகை ரூ.12,300/– வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 06

வடலூர் நகராட்சி மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் பிறந்தநாள் 25.08.2024 (ஞாயிறு கிழமை) முன்னிட்டு மக்கள் மலர் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டண தொகை ரூ.24,000/–செலுத்துமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளதை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 07

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டடம் திறப்பு விழா மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் 02.03.2024 நாளன்று திறக்கப்பட்டதை முன்னிட்டு தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விபரப்படியான விளம்பர கட்டண தொகை செலுத்துமாறு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	நாளிதழ் பெயர்கள்	கட்டண தொகை
1	தினமலர் நாளிதழ்	15960
2	தமிழ் முரசு	12000
3	மாலை மலர் நாளிதழ்	10080
4	தினமணி நாளிதழ்	15000
மொத்தம்		53,040

மேற்படி கட்டண தொகை ரூ.53,040/– வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 08

வடலூர் நகராட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பதவி ஏற்று மூன்றாண்டு நிறைவடைந்ததை முன்னிட்டு வடலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகள் குறித்து 23.10.2023 (திங்கள் கிழமை) தினத்தந்தி தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டண தொகை ரூ22,260/–செலுத்துமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளதை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 09

வடலூர் நகராட்சி புதிய அலுவலக கட்டடம் திறப்பு விழா மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் ஆகியோர் தலைமையில் 02.03.2024 நாளன்று திறக்கப்பட்டதை முன்னிட்டு தினகரன் தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டண தொகை ரூ.18000/- செலுத்துமாறு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது. மேற்படி கட்டண தொகை ரூ.18000/- வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 10

வடலூர் நகராட்சி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளான 01.03.2024 நாளன்று வடலூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்ட பணிகள் குறித்து தமிழ் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கீழ்கண்ட விபரப்படியான விளம்பர கட்டண தொகை செலுத்துமாறு பட்டியல்கள் வரப்பெற்றுள்ளது.

வ.எண்	நாளிதழ் பெயர்கள்	கட்டண தொகை
1	தினமலர் நாளிதழ்	16800
2	தினகரன் நாளிதழ்	18000
3	மாலை மலர் நாளிதழ்	7560
	மொத்தம்	**42360**

மேற்படி கட்டண தொகை ரூ42,360/- வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.134/2023/இ1)

பொருள் எண்: 11

வடலூர் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் , ஓட்டுநர்கள் ஆகியவர்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு (2024 - 2025) சீருடை வழங்குவதற்கும், தையல்கூலி வழங்குவதற்கும் கோ- ஆப்டெக்ஸ நிறுவனத்திடமிருந்து சீறுடை வாங்குவதற்கும் தோராய செலவினம் ரூ.2.00 (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண. /2024/எச்1)

பொருள் எண்: 12

வடலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பணிக்கு பயன்படுத்திவரும் வாகனம் TN31CR-4003 எண்ணுள்ள வாகனம் பழுதடைந்துள்ளதால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. மேற்கண்ட , வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு (டென்சார், ஆயில் சர்வீஸ் , கீரிஸ் பேக்கிங் உள்பட) செலவினம் ரூ.10,000/-க்கும், விலைப்புள்ளிகோரி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண். /2024/எச்1

பொருள் எண்: 13

வடலூர் நகராட்சியில் பணிபுரியும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் , துப்புரவு பணிமேற்பார்வையாளர்கள், களப்பணி உதவியாளர், ஓட்டுநர், துப்புரவு ஆய்வாளர் ஆகியவர்களுக்கு மழைகாலங்களில் வார்டுகளில் பொதுசுகாதாரப் பணி மேற்கொள்ளுவதற்கு மழைகவச உடை (Raincoat) 20 எண்ணிக்கை வாங்குவதற்கு ரூ.25000/- செலவினத்திற்கும் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்.1115/2024/எச்1

பொருள் எண்: 14

வடலூர் நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் TN-31-CA7815 மற்றும் TN31-AD-3855 ஆகிய இரண்டு வாகனங்களையும் பழுதுநீக்கம் செய்வதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடம்

சரிசெய்வதற்கும் இருவாகங்களுக்கு செலவினம் ரூ.1.60(ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

கோ.எண்.1116/2024/எச்1

பொருள் எண்: 15

வடலூர் நகராட்சியில் கணினி வரிவசூல் மையம் BSNL Chennai அவர்களால் UTIS மென்பொருள் செயல்பட்டுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளுக்கு செலுத்த வேண்டிய பட்டியல் தொகை செலுத்தக்கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை -28 அவர்களின் கடித எண்.29280/2016/IT நாள்.21.06.2024. இந்நகராட்சி ரூ.47250/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை 01.01.2024 முதல் 31.03.2024 மூன்று மாதங்களுக்கானது உடனடியாக செலுத்தக்கோரியுள்ளதால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 53(2) ல் பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறுது.

அலுவலக குறிப்பு :- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.வரி மற்றும் வரியில்லா இனங்கள் கருவூலகம் செயல்பட வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி தொகை BSNL Chennai என்ற நிறுவனத்திற்கு வருவாய் நிதியிருந்து வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1062/2023/சி1

பொருள் எண்: 16

வடலூர் நகராட்சி பணியாளர்களுக்கு அலுவலகப்பணி தொடர்பாக நடத்தப்படும் பயிற்சி தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களால் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளுக்கு அனைத்து நகராட்சிகளுக்கும் பங்களிப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதில் வடலூர் நரகாட்சிகுகு பங்களிப்பு தொகை ரூ.30,000/- 2024 - 2025ம் ஆண்டிற்கு செலுத்தக்கோரி இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்கள் தெரிவித்துள்ளதால் மேற்கண்ட தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 250/2024/சி1

பொருள் எண்: 17

இந்நகராட்யில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து தொழில் மலர் புத்தகத்தில் (மாலை மலர்) விநாயகர் சதுர்த்தி சிறப்பு தொழில் மலர் 15.09.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரம் கட்டணம் ரூ.16,800/- செலுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் கடித ந.க.எண்.122/செமதொஅ/2023, நாள்.10.08.2023 மூலமாக கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து மேற்படி தொகை ரூ.16,800/- ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4187 /2023/இ1.

பொருள் எண்: 18

வடலூர் நகராட்சி கலைஞர் பண்பாட்டுப் பாசறை விழா மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலும் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் 09.02.2024 (வெள்ளிக் கிழமை) நாளன்று புனித வள்ளலார் மேல் நிலைப்பள்ளி கடலூரில் நடைபெற்றதை முன்னிட்டு தினமணி தமிழ் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டண தொகை ரூ.15,000/-செலுத்துமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளதை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 134/2023/இ1)

பொருள் எண்: 19

வடலூர் நகராட்சி மாண்புமிகு தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் பல்வேறு துறைகள் தொடர்பான தமிழ்நாடு அரசின் சிறப்பு திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் பங்கு பெற்றுள்ளதற்கு 04.09.2023 (திங்கள் கிழமை) EVENING TAMILNADU ஆங்கில தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பர கட்டண தொகை ரூ18,900/-செலுத்துமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளதை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 134/2023/இ1)

பொருள் எண்: 20

வடலூர் நகராட்சி வடகிழக்கு பருவமழையின் காரணமாக முக்கிய பிரதான சாலையான வார்டுஎண்.7 மற்றும் வார்டுஎண்.13 காட்டுக்கொல்லை A.P நகர்4வது குறுக்குதெரு சாலைகள் குண்டுங்குழியுமாக போக்வரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அச்சாலைகளின் வழியாக பள்ளிகளுக்கு செல்லும் மாணவ/மாணவிகள் மிகவும் சிரமப்படுகின்றர். மேலும், கல்லுக்குழி, நெய்வேலி சுரங்கத்திற்கு செல்லும் சாலையாக உள்ளதால் அதிகளவில் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் இதனால் விபத்துக்கள் அதிக அளவு ஏற்படுகிறது. எனவே, சாலையினை சீரமைக்கப்பட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கையின் படியும் நகர் மன்றத்தலைவர் மற்றும் நகர் மன்றஉறுப்பினர்கள் அறிவுறுத்தலின் படியும் காட்டுக்கொல்லை சாலையில் 700 மீட்டர் நீளத்திற்கு WMM A.P நகர் 4வது குறுக்கு தெரு சாலையில் 220 மீட்டர் நீளத்திற்கு WMM மற்றும் 250 மீட்டர் நீளத்திற்கு DBM தார்சாலைகள் புணரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக்குறிப்பு மன்றம்அனுமதிக்கலாம்.

(கோப்பு. எண். 4463 /2024/இ1)

பொருள் எண்: 21

வடலூர் நகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு JCB வாகனம் இயக்குவதற்கு நிரந்தர பணியாளர் இல்லாததால் ஒரு நபரை வெளிகொணர்வு முகமை மூலமாக பணி நியமனம் செய்து அனுப்பிவைக்குமாறு ஆணையாளர் அவர்கள் அறிவுறையின்படியும் துப்பரவு ஆய்வர் அவர்களின் குறிப்பின்படியும் ஒரு நபரை வெளிகொணர்வு முகமை மூலமாக பணி நியமனம் செய்ய மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1063/2024/இ1)

பொருள் எண்: 22

வடலூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.7, காட்டுக்கொல்லை 4.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி 38 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டது. மேற்படி மேல்நிலை நீர்தேக்க தொட்டியானது முற்றிலுமாக சிதலமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் முழு கொள்ளளவிற்கு குடிநீர் ஏற்ற இயலவில்லை. இதனால் போதிய அளவு குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கமுடியவில்லை. எதிர்வரும் காலம் மழைக்காலம் என்பதால் நேரடி நீருந்து மூலம் திரவ குளோரின் கலந்து பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. மேலும், தூண்கள் மற்றும் உத்திரங்கள் முற்றிலும் சிதலமடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் அருகில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி உள்ளதால் மிகவும் ஆபத்தான சூழ்நிலை நிலவுகிறது. எனவே, பள்ளி மாணவ , மாணவியர் பாதுகாப்பு நலன் கருதியும் பொதுமக்களின் பாதுகாப்பான குடிநீர் வழங்க வேண்டியும் மேற்கண்ட மேல்நிலை நிலை நீர்தேக்க தொட்டியின் கட்டிட உறுதி தன்மை சான்று பெற அண்ணா பல்கலைக்கழகம் பண்ருட்டிக்கு கடிதம் வைக்கப்பட்டது. மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியை அண்ணா பல்கலைகழகம் அலுவர்கள் 31.07.2024 அன்று நேரடி கள ஆய்வு செய்யப்பட்டதில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி தற்போது பயன்படுத்த முடியாத ஆபத்தான நிலையில் உள்ளது எனவும், பெருபான்மையான இரும்பு கம்பிகள் முற்றிலும் துருபிடித்து சிதலமடைந்து உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட கட்டமைப்பு புனரமைக்க இயலாது எனவும் அதனை விரைவில் உடனே இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என 01.08.2024ல் அறிக்கை அளித்துள்ளது. எனவே, மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மேல்நிலை நீர்தேக்க தொட்டியினை ஆய்வு செய்து Structural Elements Stability Certificate வழங்கியதற்கு கட்டண தொகை ரூ.9,440/– செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி தொகை ரூ.9,440/– ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

1. மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியை இடித்துஅப்புறப்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.
2. கட்டிட உறுதிதன்மை சான்று (Structural Elements StabilityCertificate) வழங்கியதற்கான கட்டணத்தொகையை அண்ணா பல்கலைகழகம், பண்ருட்டி, அவர்களுக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு. எண். /2024/இ1

பொருள் எண்: 23

வடலூர் நகராட்சி வடகிழக்கு பருவமழை 2024 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் கடித ந.க.எண் ஆ1/2078102/2024, நாள்.18.09.2024 கடிதப்படி 19.09.2024 மாலை 4.00 மணியளவில் அனைத்துறை அலுவலர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் கடலூர் மாவட்டம் அவர்களின் தலைமையில் பேரிடர் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பொது சுகாதாரம், பாதுகாப்புடன் குடிநீர் விநியோகம், தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை அகற்றுதல், WMM நிரப்புதல், மரங்கள் அகற்றுதல், கால்வாய் தூர்வாருதல் மற்றும் மழைகாலங்களில் வெள்ள பாதிக்கப்படும் இடங்களிலிருந்து பொதுமக்களை முகாம்களில் தங்கவைக்கப்பட வேண்டும் போன்ற பணிகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது. அதன்படி தாழ்வான பகுதிகளில் தேங்கும் மழைநீரை வெளியேற்ற தேவையான ஆயில் இன்ஜின், PVC Pipe. மரம் அருக்கும் இயந்திரம் கொள்முதல் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல், மேல் நிலை நீர்தேக்க தொட்டிகளில் குடிநீர் ஏற்றும் மின் உந்திகள் பழுதடையும் போது சரிசெய்யவும் மற்றும் வாடகைக்கு அமர்த்துதல் குடியிருப்புகளில் தேங்கும் மழைநீரை JCB மூலம் அகற்ற வாடகைக்கு அமர்த்துதல் , முகாம் அடிப்படை வசதிகள் மற்றும் இதரப்பணிகள் போன்ற பணிகளுக்கு உத்தேச மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்தினை வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 549/2024/இ1)

பொருள் எண்: 24

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.04, பாட்டை தெருவில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 திட்டத்தின் கீழ் புதியதாக 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்க தொட்டி, பம்பு ரூம் மற்றும் சுற்றுசுவர் அமைக்கும் பணிகளுக்கு ரூ.99.00 இலட்சத்தில் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களின் தொழில்நுட்ப உத்தரவின்படி மேற்படி பகுதியில் மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ள அறிக்கையின்படி கட்டிட வடிவமைப்பு பெற அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, கட்டிட வடிவமைப்பு (Structural Disgn) மற்றும் Vetting அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி மூலம் பரிசோதனை செய்து தர மதிப்பீடு ரூ.70,000/– ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக்குறிப்பு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு. எண். /2024/இ1

பொருள் எண்: 25

வடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சர்வே எண் 101/5 நகராட்சி பொது மயான இடத்தின் அருகில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023–24ன் கிழ் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணியில் கழிவறை கட்டடம், இருசக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் பாதுகாப்பு காரணமாக தடுப்புகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.9.80 இலட்சத்தினை நகராட்சி வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள 19.01.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது..

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S MHT ENGNEERING , சென்னை	(–) 0.09 % குறைவு
2	M/S YES YES YES ENGNEERING, சென்னை	(+) 0.69 % அதிகம்

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள M/S MHT ENGNEERING, சென்னை மதிப்பீட்டை விட (–) 0.09 % குறைவாக கொடுத்துள்ள M/S Devi Constraction ஒப்பந்ததாரர், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். 4463 /2023/இ1)

பொருள் எண்: 26

வடலூர் நகராட்சி வடகிழக்கு பருவமழையின் காரணமாக முக்கிய பிரதான சாலையான வார்டு எண்.7 மற்றும் வார்டு எண் 13 காட்டுக்கொல்லை A.P நகர் 4வது குறுக்கு தெரு சாலைகள் குண்டுங்குழியுமாக போக்வரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதை WMM மற்றும் DBM தார்கலவை கொண்டு புனரமைக்கும் பணிகளுக்கு 19/01/2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்தநிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	திரு.A.ஸ்டாலின். வடலூர்	(+) 0.73 % அதிகம்
2	M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்	(−) 0.48 % குறைவு

அலுவலக்குறிப்பு மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்02ல் உள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட (−) 0.48 % கொடுத்துள்ளதை மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு. எண். 4463 /2024/இ1)

பொருள் எண்: 27

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 பூசாலிக்குப்பம் MRF சென்டரில் Grill Gate, GI Sheet மற்றும் புணரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.540, நாள்.19.08.2024ல் அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து 23.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	சதவீதம்
1.	M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்	(−)0.14% குறைவு
2.	M/S செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை	(+)1.19% அதிகம்

அலுவலக்குறிப் மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் கடலூர், அவர்கள் மதிப்பீட்டை விட (−) 0.14% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு. எண். 831/2024/இ1

பொருள் எண்: 28

இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு மூன்று தொழில்நுட்ப உதவியாளர்கள் வெளிகொணர்வு முகமை மூலம் 6மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.541, நாள்.19.08.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(+) 1.29 % அதிகம்
2	A.Stalin, வடலூர்	(−) 0.71 % குறைவு

அலுவலகக்குறிப்பு:− மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (−) 0.71 % குறைவாக கொடுத்துள்ள A.Stalin, ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவுசெய்யலாம்.

(கோப்பு எண். 874 /2024/இ1)

பொருள் எண்: 29

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, ஆபத்தாரணபுரம், வார்டு எண்.4 பாட்டை தெரு வார்டு எண்.5, இபி ஆபிஸ் ரோடு, வார்டு எண்.06 ஜெயப்பிரியா நகர், வார்டு எண்.7 காட்டுக்கொல்லை, வார்டு எண்.12, கணபதி நகர், வார்டு எண்.15 நாகப்பசாமி நகர் ஆகிய பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளில் உள்ள மின்ஒயர்கள் மற்றும் HDPE 90mm குழாய் மிகவும் பழுதடைந்த நிலையில் HDPE 90mm குழாய் மற்றும் மின்ஒயர்கள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.565, நாள்.19.08.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(–) 1.40 % குறைவு
2	A.Stalin, வடலூர்	(+) 1.38 % அதிகம்

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 1.40 % குறைவாக கொடுத்துள்ள M/S Devi Constraction, கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு எண். /2024/இ1)

பொருள் எண்: 30

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3, ஆபத்தாரணபுரம், வார்டு எண்.4 பாட்டை தெரு வார்டு எண்.5, இபி ஆபிஸ் ரோடு, வார்டு எண்.06 ஜெயப்பிரியா நகர், வார்டு எண்.7 காட்டுக்கொல்லை, வார்டு எண்.12, கணபதி நகர், வார்டு எண்.15 நாகப்பசாமி நகர் ஆகிய பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளின் மோட்டார்களில் பழுதுகள் ஏற்பட்டு காயில் ரீவைண்டிங் செய்ய முடியாத நிலையில் ஸ்டார்கள் மற்றும் மின்மோட்டார்கள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.566, நாள்.19.08.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(–) 0.96 % குறைவு
2	A.Stalin, வடலூர்	(+) 0.67 % அதிகம்

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.96 % குறைவாக கொடுத்துள்ள M/S Devi Constraction, கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.873 /2024/இ1)

பொருள் எண்: 31

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01, முதல் 27 வார்டுகளில் உள்ள 27 மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் 49 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யும் பணியில் மின்மோட்டாரில் ஏற்படும் பழுதுகளை உடன் சரிசெய்ய ஒரு மின்னாளர் மற்றும் ஒரு மின் கம்பி உதவியாளர் வெளிகொணர்வு முகமை மூலம் 6மாத காலத்திற்கு பணி அமர்த்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்தில் நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.542, நாள்.19.08.2024 அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(+) 2.83 % அதிகம்

2	A.Stalin, வடலூர்	(–) 1.13 % குறைவு

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 1.13 % குறைவாக கொடுத்துள்ள A.Stalin, ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவுசெய்யலாம்.

(கோப்பு எண். /2024/இ1)

பொருள் எண்: 32

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14 தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக பணிமனைக்கு கான்கீரிட் தளம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்தில் குறிஞ்சப்பாடி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024 – 2025 ல் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர் அவர்களின் கடிதத்தில் அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(–) 0.15 % குறைவு
2	M/S செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை	(+) 1.14 % அதிகம்

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.15 % குறைவாக கொடுத்துள்ள M/S Devi Constraction, ஒப்பந்ததாரர், கடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவுசெய்யலாம்.

(கோப்பு எண். 947 /2024/இ1)

பொருள் எண்: 33

வடலூர் நகராட்சி சத்திய ஞானசபை எதிரில் செயல்படும் அரசு மேம்படுத்தப்பட்ட ஆய்வு சுகாதார நிலையத்தில் உள்ள CRRI கட்டத்தில் மாற்று திறனாளிக்ளுக்கு ஏற்ற வகையில் கழிவறை , கைப்பிடி மற்றும் சாய்வுத்தளம் உள்ளிட்ட புனரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்தில் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் நிதி 2024 – 2025கீழ் மேற்கொள்ள அனுமதியளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து 24.09.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ.எண்	ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	M/S Devi Constraction,கடலூர்	(+) 0.45 % அதிகம்
2	A.Stalin, வடலூர்	(–)0.17 % குறைவு

அலுவலகக்குறிப்பு:– மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–) 0.17 % குறைவாக கொடுத்துள்ள A.Stalin, ஒப்பந்ததாரர், வடலூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் பதிவுசெய்யலாம்.

(கோப்பு எண். 519 /2024/இ1)

நகர்மன்ற தலைவர்
வடலூர் நகராட்சி.

வடலூர் நகராட்சி

மன்றக் கூட்ட அழைப்பிதழ்

****

2024 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30.09.2024.திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.

2024 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 05

வடலூர் நகராட்சி பகுதியில் உள்ள வடிகாலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீர் மாதிரிகளை பரிசோதனை செய்து அறிக்கை சமர்பிக்கமாறு பணி இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் கடித ந.க.எண் 9192/2022/SBM1. நாள்13.01.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி பகுதியில் உள்ள 1) கோபி பவானி திருமண மண்டபம் அருகில் உள்ள வடிகால் கழிவுநீர், 2)அன்னை சத்யா வீதி வடிகால், 3) கல்லூக்குழி சாலை வடிகால் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட கழிவுநீர் பரிசோதனை செய்து தர உதவி இயக்குநர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், சிப்காட் தொழிற்பேட்டை, குடிகாடு அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதில் கட்டண தொகை ரூ.12,300/– செலுத்த வேண்டும் என மேற்படி துறையின் கடித ந.க.எண்.TNPCB/AEL/CUD/F. நாள்.20.09.2024 கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கட்டண தொகை ரூ.12,300/– வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.134 /2024/இ1)

தீர்மானம் எண்.575. நாள்.30.09.2024. அனுமதிக்கப்பட்டது.

ஓம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்(கூ.பொ)
வடலூர் நகராட்சி

2024 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: **திரு. சு. சிவக்குமார்,**
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 20

வடலூர் நகராட்சி வடகிழக்கு பருவமழையின் காரணமாக முக்கிய பிரதான சாலையான வார்டுஎண்.7 மற்றும் வார்டுஎண்.13 காட்டுக்கொல்லை A.P நகர்4வது குறுக்குதெரு சாலைகள் குண்டுங்குழியுமாக போக்வரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் அச்சாலைகளின் வழியாக பள்ளிகளுக்கு செல்லும் மாணவ/மாணவிகள் மிகவும் சிரமப்படுகின்றர். மேலும், கல்லுக்குழி, நெய்வேலி சுரங்கத்திற்கு செல்லும் சாலையாக உள்ளதால் அதிகளவில் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர் இதனால் விபத்துக்கள் அதிக அளவு ஏற்படுகிறது. எனவே, சாலையினை சீரமைக்கப்பட வேண்டும் என அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கையின் படியும் நகர் மன்றத்தலைவர் மற்றும் நகர் மன்றஉறுப்பினர்கள் அறிவுறுத்தலின் படியும் காட்டுக்கொல்லை சாலையில் 700 மீட்டர் நீளத்திற்கு WMM A.P நகர் 4வது குறுக்கு தெரு சாலையில் 220 மீட்டர் நீளத்திற்கு WMM மற்றும் 250 மீட்டர் நீளத்திற்கு DBM தார்சாலைகள் புணரமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலக்குறிப் மன்றம்அனுமதிக்கலாம்.

(கோப்பு. எண். 4463 /2024/இ1)

தீர்மானம் எண். 590 . நாள்.30.09.2024. அனுமதிக்கப்பட்டது.

ஓம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்(கூ.பொ)
வடலூர் நகராட்சி

2024 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: **திரு. சு. சிவக்குமார்,**
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 26

வடலூர் நகராட்சி வடகிழக்கு பருவமழையின் காரணமாக முக்கிய பிரதான சாலையான வார்டு எண்.7 மற்றும் வார்டு எண் 13 காட்டுக்கொல்லை A.P நகர் 4வது குறுக்கு தெரு சாலைகள் குண்டுங்குழியுமாக போக்வரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதை WMM மற்றும் DBM தார்கலவை கொண்டு புனரமைக்கும் பணிகளுக்கு 19/01/2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்தநிறுவனத்தின் பெயர்	சதவீதம்
1	திரு.A.ஸ்டாலின். வடலூர்	(+) 0.73 % அதிகம்
2	M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்	(–) 0.48 % குறைவு

அலுவலக்குறிப்பு மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்02ல் உள்ள M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட (–) 0.48 % கொடுத்துள்ளதை மன்றம் பதிவு செய்யலாம்.

(கோப்பு. எண். 4463 /2024/இ1)

தீர்மானம் எண். 596 . நாள்.30.09.2024. அனுமதிக்கப்பட்டது.

ஓம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்(கூ.பொ)
வடலூர் நகராட்சி

2024 – ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30ம் தேதி திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற வடலூர் நகராட்சி நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: **திரு. சு. சிவக்குமார்,**
நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி

பொருள் எண்: 27

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.01 பூசாலிக்குப்பம் MRF சென்டரில் Grill Gate, GI Sheet மற்றும் புணரமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.540, நாள்.19.08.2024ல் அனுமதி பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து 23.08.2024ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

வ. எண்	ஒப்பந்ததாரர் பெயர்	சதவீதம்
1.	M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன், கடலூர்	(–)0.14% குறைவு
2.	M/S செம்பையனார் கன்ஸ்ட்ரக்ஷன், முதனை	(+)0.70% அதிகம்

அலுவலக்குறிப்பு மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S தேவி கன்ஸ்ட்ரக்ஷன் கடலூர், அவர்கள் மதிப்பீட்டை விட (–) 0.14% குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு. எண். 831/2024/இ1

தீர்மானம் எண்.597. நாள்.30.09.2024. அனுமதிக்கப்பட்டது.

ஓம்) திரு. சு. சிவக்குமார்,
நகர்மன்றதலைவர்,
வடலூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்(கூ.பொ)
வடலூர் நகராட்சி